# ஆற்காடு நகராட்சி

2023 அக்டோபர் மாதம் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைப்பெற்ற சிறப்புக்கூட்டத்தின் தீர்மானத்தின் உண்மை நகல்.

**பொருள் எண்.01,**

04.03.2022ம் தேதியன்று ஆற்காடு நகரமன்றத்தின் நகரமன்ற தலைவராக நான் பொறுப்பேற்று கொண்டேன். அதை தொடர்ந்து நகராட்சியுடைய வளர்ச்சிக்கும் வருமானத்திற்கும் வித்திடும் வகையில் பழைய பேருந்து நிலையத்தை இடித்து நவினமயமாக புதியதாக கட்ட அரசிடம் கோரியதின் பேரில் அரசு முழுமையாக ஆய்வு செய்து புதிய கட்டிடம் கட்ட தொகை ரூ.6.00 கோடி முழுவதும் மானியமாக தமிழ்நாடு முதலமைச்சரின் முத்திரை பதிக்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முதலமைச்சரால் சட்டப்பேரவையில் ரூபாய்.6.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என அறிவித்தார், அதை தொடர்ந்து அரசாணை எண். 28, நாள் 22.02.2023 அன்று அனுமதி அளிக்கப்பட்டு, புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக நடவடிக்கை துவக்கப்பட்டது. வியாபாரிகளை அழைத்து மூன்று முறை ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது, அவர்கள் நாங்கள் உடனடியாக காலி செய்கிறோம் என தெரிவித்தார்கள். மேலும், விரைந்து பேருந்து நிலையம் அமைத்து எங்களுக்கும் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் விரைந்து முடித்து தரும்படி கேட்டுக்கொண்டனர். அதன் அடிப்படையில் அனைத்து துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கட்டிடங்கள் இடிக்கப்பட்டது. அந்த சமயத்தில் புதிய சர்வே எண்.134, வார்டு.A, பிளாக்.33 நகர அளவை எண்.134, பழைய சர்வே எண். 71/2C என்ற இடத்தில் உள்ள கடைகளை அப்புறப்படுத்த கூறினோம். ஆனால் அதில் கடை வைத்திருந்த, 1.A.L.லோகேஷ் த/பெ.லேட்.லோகநாதன், 2.A.ராஜா, த/பெ.ஆண்ட்ருஸ், 3.D,மனோகரன், த/பெ.லேட்.துரைசாமி, 4.P.நெடுமாறன், த/பெ.லேட்பொன்னம்பலம், 5.E.தியாகராஜன் த/பெ.(லேட்) ஏகாம்பரம். என்பவர்கள் மேற்கண்ட இடம் ஹசரத் சையத் ஷா தாதாபீர் தர்ஹாவுக்கு சொந்தமான இடம் அதை நாங்கள் காலி செய்யமாட்டோம் என தெரிவித்தனர்.

மேலும், எங்களுக்கு வேலூர் சார்பு நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக் கட்டளை வழக்கு எண். 472/99, நாள் 04.08.2009, அன்று எங்களை நகராட்சி நிர்வாகம் எந்த இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை உள்ளது தெரிவித்தனர். அதனை தொடர்ந்து ஆய்வு செய்ததில். ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட மையப்பகுதியில் ஆற்காடு நகராட்சி பேருந்து நிலையம் அமைந்துள்ள **இடம் நாள் 28.08.1939ல் திரு.A.P. தனக்கோட்டி, த/பெ.பரத்ராஜா,** என்பவரிடம் **பழைய சர்வே எண்.71/2 ல்** இருந்த இடத்தை நகராட்சி பயன்பாட்டிற்காக **67சென்ட்** இடத்தை கிரையமாக பெற்று **ஆவண எண்.1388/1939, நாள் 28.08.1939ல்** நகராட்சிக்கு விற்பனை பத்திரம் ஆவணம் மூலம் பெறப்பட்டுள்ளது.

மேற்படி, சர்வே எண்யில் **0.07சென்ட்** இடத்தில் கிணறு இருப்பதாகவும் அதைக்கொண்டு மற்ற நிலங்கள் பயிரிட வேண்டியுள்ளதால், **0.07சென்ட்** இடத்தை எங்கள் பயன்பாட்டிற்காக நிறுத்திக் கொள்வதாகவும், இருப்பினும் மேற்கண்ட கிணற்றில் இருந்து ஆற்காடு ஊராட்சி மன்ற தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி அளித்து பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதை தொடர்ந்து, ஆற்காடு ஊராட்சி மூலம் 67 **செண்ட்டில்** பேருந்து நிலையம் அமைத்து கிணற்றில் இருந்து தண்ணீரை பேருந்து நிலைய பயன்பாட்டிற்காக தொட்டி அமைத்து பொது மக்கள் பயன்படுத்தி வந்தனர். அந்த நிலையில் **1951ஆம் ஆண்டு பழைய சர்வே எண்.71/2C –ன்படி** இருந்த 0.07 சென்ட் இடத்தை 1951ஆம் ஆண்டு நகர அளவு ஆவணப்படி **வார்டு –A, பிளாக் எண்.33. நகர அளவு எண்.134ல் உள்ள 0.07 செண்ட்** கிணறு இருந்த இடத்தை ஆற்காடு ஊராட்சி ஆவண எண்.390/1951. நாள் 20.02.1951ல் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கிணற்றில் இருந்து தானம் கொடுத்தவர் **திரு.A.P.தனக்கோட்டி, த/பெ.பரத்ராஜா,** அவருக்கு சொந்தமான நிலத்திற்கு தண்ணீர் எடுக்க உரிமை உண்டு என பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட சொத்து ஆற்காடு ஊராட்சி மன்றத்தின் பெயரில் நில அளவை பதிவேட்டில் உள்ளது. அதை யாரோ சிலர் நகராட்சி பதிவேட்டில் மேற்கண்ட இடம் **"கோரி"** என கையால் எழுதி திருத்தம் செய்துள்ளனர். அதில் திருத்தம் செய்த அலுவலர்கள் யாருடைய கையொப்பமும் இல்லை ஆற்காடு நகராட்சி அலுவலக ஆவணத்தில் மட்டுமே திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், வட்டாட்சியரிடம் உள்ள ஆவணத்திலும் மற்றும் ஆவண காப்பாக அலுவலகத்தில் உள்ள ஆவணத்திலும் எந்த வித திருத்தமும் இல்லாமல் ஆற்காடு ஊராட்சி பெயரிலே உள்ளது. எனவே, சட்டத்திற்கு புறம்பாக யாரோ தனிநபர்கள் திருத்தம் செய்துள்ளார்கள் என்பது தெறியவாகிறது. இதை தொடர்ந்து தண்ணீர் தொட்டியாக இருந்ததை கோரியாக மாற்றி அந்த சர்வே எண்.134 இடத்தில் பல கடைகள் அமைத்து அந்த இடம் கோரிக்கு சொந்தமானது என அவர்களாகவே அறிவித்துக்கொண்டனர். அந்த இடத்தில் வாடகைக்கு இருந்ததாகவும் 1.திரு.ஈ.தியாகராஜன். 2,சத்தி.பி.கருணா. 3.சையத் ஜாபர், தவா சொத்தின் முத்தவல்லி எங்களுக்கு வாடகைக்கு கொடுத்துள்ளதாகவும், நகராட்சியோ முத்தவல்லியோ எங்களை காலி செய்ய கூடாது என நகராட்சியின் மீது சார்பு நீதிமன்றம் வேலூர், அசல் வழக்கு எண்.472/99, வழக்கு தொடர்ந்தனர்.

அந்த வழக்கில் ஆற்காடு நகராட்சி சார்பில் 16.11.2000 அன்று ஆணையாளராக இருந்த திரு.தா.வி.போஸ் அவர்கள் எதிர் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட வழக்கில் தீர்ப்பு எண். 472/99,ன் மீது 04.08.2009 அன்று ஆணையாளர் மேற்கண்ட சொத்து நகராட்சிக்கு சொந்தமானது என எந்த வித ஆதாரமும் தாக்கல் செய்யாமல் தோன்றாத் தரப்பினராக இருந்து வந்துள்ளதை எதிராளிக்கு சாதகமாக்கி இனி வரும் காலங்களில் நகராட்சி மேற்கண்ட இடத்தில் உள்ளவர்களுக்கு எந்தவித இடையுறும் செய்யக்கூடாது என நிரந்தர உருத்துக் கட்டளை பிறப்பித்துள்ளது. 16.11.2000ம் அன்று பொறுப்பில் இருந்த ஆணையாளர் திரு.தா.வீ.போஸ் மற்றும் நகரமைப்பு அலுவலர் திரு.பூபதி சர்வேயர் திரு.சேட்டு, ஆற்காடு நகராட்சி வழக்கறிஞர் திரு.கணேசன் ஆகியோர் முறையாக தாக்கல் செய்து.

மேற்கண்ட வழக்கை முறையாக நடத்தாதால் எதிராளிகளுக்கு சாதகமாக கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது. மேலும், அந்த இடத்தில் கடந்த காலங்களில் நகராட்சி, கோழி சந்தையாக ஒப்பந்தப்புள்ளி கோரி வருமானம் ஈட்டி வந்துள்ளது. இவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் நகராட்சிக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. மின் இணைப்பு எண்.252010997, நாள் 29.11.2011 அன்று ஆணையாளர் பெயரில் பெறப்பட்டுள்ளது, அந்த காலக்கட்டத்தில் திருமதி.எஸ்.பாரிஜாதம் அவர்கள் ஆணையாளராக இருந்துள்ளார்.

மேற்படி, மின் இணைப்பு எண்.252010323, நாள் 02.03.2016 அன்று ஆணையாளர் பெயரில் பெறப்பட்டுள்ளது, அந்த காலக்கட்டத்தில் திரு.கார்த்திக்கேயன் அவர்கள் ஆணையாளராக பொறுப்பில் இருந்துள்ளார். மேற்படி, நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துக்கொண்டு அவர்களுடைய இடம் என வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஆணையாளர் பெயரிலேயே எவ்வாறு மின் இணைப்பு பெறப்பட்டது. மேலும், அந்த காலக்கட்டத்தில் இருந்து ஆணையாளர் பொறுப்பாளர்கள். என்பதையும் ஆவணங்கள் ஆய்வு செய்ததில் அறிந்துக்கொண்டேன். நாள் 16.11.2000 முதல் தீர்ப்பு வழங்கிய நாள் வரை மேற்கண்ட இடம் நகராட்சிக்கு சொந்தமானது என நிருபிக்க தவறிய பொறுப்பில் இருந்து அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரியும் தற்போது புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக அனைத்து கடைகளும் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கடைகளும் முறையான அறிவிப்பு கொடுத்து காலி செய்யப்பட்டது. விரைந்து பேருந்து நிலையம் கட்டப்பட்டால் ஆண்டிற்கு பேருந்து நிலையம் மூலம் நகராட்சிக்கு வருமானம் 1 .0 கோடி 20 இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெற்று. மேலும், கூடுதல் வருமானம் ஈட்ட முடியும் பொதுமக்கள் நலன் கருதியும் நகராட்சின் வருமானபெருக்கததையும் கருத்தில் உடனடியாக பேருந்து நிலைய கட்டுமான பணிகள் துவங்கி முழுமையடைய தடையாக உள்ள வேலூர் சார்பு நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக் கட்டளையின் மீது மேல்முறையீடு செய்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் தவறு இழைத்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி தீர்மானித்தல்.

## தீர்மானம் எண் 255, நாள் 20.10.2023.

4வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.அ.அனு, அவர்கள் முன்மொழிய.

3வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ப.ஆனந்தன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்படுகிறது.

மேலும்,இத்தீர்மானத்தில் கண்ட சொத்தானது ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமானது. அதனை தமிழ்நாடு வக்பு வாரியத்தில் நாள் 12.2.1991 பதிவு எண்.292ன் மூலம் வஃக்பு வாரியத்திற்கு சொந்தமானது என பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ஆற்காடு கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழின்படி ஜனாப்.SKS, கமாலூதீன், முத்தவல்லி என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் வக்பு வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

ஆனால் மேற்கண்ட சொத்து ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமானது என்பதை பத்திர பதிவு துறை வழங்கிய ஆவணம் மூலம் தெரியவருகிறது. வஃக்பு வாரியம் இந்த சொத்தை எந்தவித மூல ஆவணம் இல்லாமல் சட்டவிரோதமாக தன்னுடைய சொத்து என உரிமைக்கோரி அனுபவித்து வருவது சட்டத்திற்கு புறம்பானது என கண்டறியப்பட்டது. எனவே, பத்திர பதிவு துறை ஆவணங்கள் அடிப்படையில் மேற்கண்ட சொத்தானது ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமானது என்பதால் வஃக்பு வாரியம் மேற்கண்ட பதிவினை நீக்கி ஆற்காடு நகராட்சி வசம் உடனடியாக ஒப்படைக்க வஃக்பு வாரியத்தை வலியிருத்தி ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

தற்போது ஆற்காடு நகராட்சி பழைய பேருந்து நிலையம் பயன்பாட்டில் இருந்த நிலையில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி துவங்கி உள்ள நிலையில் சட்டவிரோதமான ஆக்கிரமிப்புகளை அகற்றும் முறையில் இருக்கும் பொழுது மேற்கண்ட சொத்தின் சட்ட விரோதமான வஃக்பு வாரியத்தில் செயல், அந்த வாரியத்தின் மூலம் அனுபவபாத்தியத்தில் உள்ளவர்களின் சட்ட விரோதமான செயல்கள் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வகையில் மக்கள் சேவைக்காக தானமாக கொடுக்கப்பட்ட சொத்தை தன்னகபடுத்தி கொள்ளும் வகையில் திருத்திய அனைத்து நபர்கள் மற்றும் முன்னாள் அதிகாரிகள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க ஏகமனதாக தீர்மானிக்கிறது.

நீண்ட காலமாக ஆற்காடு பொது மக்களின் பொது பயன்பாட்டில் இருந்து வந்த ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான நிலத்தை, எந்தவிதமான ஆவணமும் இல்லாமல் முறைகேடாக வஃக்பு வாரியத்திற்கு சொத்தாக்கம் செய்ய தவறான முயற்சிகளை மேற்கொண்ட முத்துவல்லி ஜனாப்.S.K.S, கமாலூதீன் மற்றும் முறைகேடாக நகர நில அளவை ஆவணத்தில் ர.மனையை கோரி மேடாக கையால் திருத்தம் செய்து சான்று வழங்கிய கிராம நிர்வாக அலுவலர், அதன் தொடர்ச்சியாக 2004ல் அனுபவதாரராக பதிவு செய்து சான்று வழங்கிய நில அளவையர் மற்றும் 2012ம் ஆண்டு மேற்கண்ட சொத்தின் எந்த ஆவணமும் ஆய்வு செய்யாமல் கோரிமேடு ஹஸரத் சையத்ஷா, தாதாபீர்(ரஷ்) தர்கா பெயரில் பட்டா வழங்கிய திருமதி.மு.பட்டுரோஜா, தனி வட்டாச்சியர் (நிலவரித்திட்டம் ஆற்காடு) அவர்கள் மீதும், மேலும்,முத்துவல்லி.திரு.சையத் ஜாபர், திரு.ஈ.தியாகராஜன், சத்தி.பி.கருணா. மற்றும் சையத் ஜாபர் மற்றும் 1997 முதல் தற்போது வரை முத்துவல்லியாக உள்ள ஜனாப்.எஸ், சையத் மீர், மற்றும் தற்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கடை நடத்தி வரும் 1.A.L.லோகேஷ் த/பெ.லேட்.லோகநாதன், 2.A.ராஜா, த/பெ.ஆண்ட்ருஸ், 3.D,மனோகரன், த/பெ.லேட்.துரைசாமி, 4.P.நெடுமாறன், த/பெ.லேட்பொன்னம்பலம், 5.E.தியாகராஜன் த/பெ.லேட் ஏகாம்பரம். என்பவர்கள் மற்றும் கவன குறைவாகவும் தன்னிச்சையாகவும் அதிகாரவரம்புகளை மீறி செயல்பட்ட சம்மந்தப்பட்ட நகராட்சி அதிகாரிகளை பொறுப்பாக்கம் செய்தும். மேலும், மேற்கண்ட நபர்கள் நகராட்சிக்கு எதிராக வேலூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.472/99ல் தொடரப்பட்ட வழக்கினை முறையாக நடத்த தவறிய அப்போதிய நகராட்சி ஆணையர் திரு.தா.வீ.போஸ், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளவும், தனிநபர்கள் மீது காவல் துறை மூலம் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

வேலூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.472/99ல் வழக்கில் ஆற்காடு நகராட்சி சார்பில் எதிர் மனு நாள் 16.11.2000, ஆணையாளராக இருந்த திரு.தா.வி.போஸ் அவர்கள் தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட சொத்து ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமானது என எந்த வித ஆதாரமும் தாக்கல் செய்யாமல் தோன்றாத் தரப்பினராக இருந்து வந்துள்ளதை எதிராளிக்கு சாதகமாக்கி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, 16.11.2000 முதல் 04.08.2009 வரை நகராட்சி ஆணையாளராக இருந்தவர்களை பொறுப்பாக்கி துறை ரீதியான நடவடிக்கையும் சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்க கோரி ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

மேலும், வேலூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.472/99ல் வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்து ஆற்காடு நகராட்சி பேருந்து நிலையம் முழுமையாக கட்டி முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர உடனடி நடவடிக்கை எடுக்க கோரி ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் அங்கீகரிக்கப்படுகிறது :**

**பொருள் எண்.02,**

ஆற்காடு நகராட்சி அலுவலக கட்டிடம் பழைய கட்டிடத்தை இடித்து புதியதாக அலுவலக கட்டிடம் கட்ட ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கி அரசு உத்திரவிட்டதின் பேரில்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பழைய கட்டிடங்கள் முழுமையாக இடித்து அப்புறப்படுத்தப்பட்டு புதியதாக கட்டிடம் கட்ட நாள் 19.02.2014 அன்று தமிழ்நாடு முதல்வரால் அடிக்கல் நாட்டப்பட்டது. மேற்கண்ட புதிய அலுவலக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 28.12.2015ம் தேதியன்று தமிழ்நாடு முதல்வரால் திறப்பு விழா செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. மேற்படி அலுவலக கட்டிடத்தில் நாள் 07.07.2018ம் தேதியன்று ஆற்காடு அண்ணா சாலையில் தனியாருக்கு சொந்தமான சொத்தில் திருமுருகன் என்பவர் பாத்திர வியாபார கடை நடத்தி வந்துள்ளார். திருமுருகன் அவருக்கு சொந்தமான பொருட்களை அலுவலகத்தின் முதல் தளத்தில் மற்றும் வாகனம் நிறுத்தும் அறையில் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும். அதனுடைய விவரங்கள் ஆணையாளரிடம் கோரப்பெற்றதை அடுத்து அப்போதைய கோட்டாட்சியர் திரு.கோ.கா.வேனு சேகரன். வட்டாட்சியர் திருமதி.சுமதி மற்றும் ஆணையாளர் திருமதி.சகிலா, ஆகியோர் ஆற்காடு அண்ணா சாலையில் அனுமதி பெறாமல் கட்டிய கட்டிடத்தை கோர்ட்டு உத்திரவின்படி இடித்து அப்புறப்படுத்த கோட்டாட்சியர் உத்திரவிட்டதாகவும், கடை உரிமையாளர் திருமுருகன் கடையை பூட்டி விட்டு சென்றதால் பூட்டை உடைத்து பொருட்களை கையகப்படுத்தி அப்போதைய கோட்டாட்சியர். திரு.கோ.கா.வேனு சேகரன், அவர்களின் உத்திரவின் பேரில் பொருட்கள் அனைத்தும் கொண்டு வந்து ஆணையாளர் திருமதி.சகிலா அவர்கள் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் திருமதி.அலமேலு அவர்கள் ஆற்காடு நகராட்சி அலுவலகத்தில் பொருட்களை வைத்து கட்டிடங்களை பூட்டி சீல் வைத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுநாள் வரையில் மேற்கண்ட பொருட்களை நகராட்சி அலுவலகத்தில் இருந்து அகற்றப்படவில்லை. நாங்கள் பலமுறை ஆணையாளர் கவணத்திற்கு கொண்டு சென்றும் எந்தவித நடவடிக்கை மேற்கொள்ளவில்லை, சுமார் 2.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடம் எந்த நோக்கத்திற்காக கட்டப்பட்டதோ அதை நடைமுறைப்படுத்தாமல் சிதைக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு அலுவலகத்தில் அலுவலக பணியை தவிர்த்து தனியாருக்கு சொந்தமான பொருட்களை கொண்டு வந்து வைத்தது முறையல்ல ஆதலால் நகரமைப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் நகர நில அளவை பிரிவு போன்றவை மீதம் காலியாக இருக்கும் இடத்தில் தடுப்பு அமைத்து, முற்றிலும் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில் கோப்புகள் மற்றும் அலுவலகர்கள் பணியாற்றி வருகிறார்கள். மேலும், அலுவலகத்திற்கு தேவைப்படும் UPS Battery System அமைந்துள்ள இடத்தில் பொறியாளர் பிரிவின் அலுவலர்கள் பணிபுரியும் நிலை உள்ளது. அதில் ஏற்பாடு நச்சு புகையால் ஊழியர்கள் பாதிப்படைகிறார்கள். எனவே, மேற்கண்ட பொருட்களை அலுவலகத்தில் வைக்க கோரியவர்களின் மீதும் கொண்டு வந்து வைத்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவும் உடனடியாக மேற்கொண்ட பொருட்களை அப்புறப்படுத்தி எந்த நோக்கத்திற்காக அலுவலகம் கட்டிடம் கட்டப்பட்டதோ அதை நடைமுறைப்படுத்த கோரி தீர்மானித்தல்.

**தீர்மானம் எண் 256, நாள் 20.10.2023.**

6வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. எல்.ராஜ லட்சுமி அவர்கள் முன்மொழிய.

30வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ம.ரவி சந்திரன் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக ஆங்கீகரிக்கப்படுகிறது.

மேலும், இரண்டாம் தளத்தில் கூட்ட அரங்கம் நடத்துவதற்காக கட்டப்பட்ட கட்டிடம். அந்த இடத்தில் நகரமன்ற கூட்டம் நடத்த ஏதுவாக உடனடியாக காலி செய்து கூட்ட அரங்கமாக மாற்றிதருமாறும், மாவட்ட ஆட்சித் தலைவர் சிறப்பு கவனம் செலுத்துமாறும் கேட்டுக் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் அங்கீகரிக்கப்படுகிறது :**

**பொருள் எண்.03,**

ஆற்காடு நகராட்சியில் நகரமன்ற உறுப்பினராக 28வது வார்டில் தேர்வு செய்யப்பட்ட திரு.கே.உதயகுமார், என்பவர் தான் பதவி ஏற்றுகொண்ட போது எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கு மாறாகவும் நகராட்சி மன்றத்தின் மாண்பை குலைக்கும் வகையிலும், நகராட்சி பணிகளுக்கு இடையுறாகவும் நிதி இழப்புக்கு காரணமாகவும் நகரமன்றத் தலைவர் அவர்களின் உத்திரவுகளுக்கு கட்டுப்படாமலும், நகரமன்ற தலைவர் மற்றும் நகராட்சி அலுவலர்களையும் பற்றியும் அவதூறாக பேசி வலைதளங்களில் பதிவிடுவதும் போன்ற சட்டத்திற்கு புறம்பாக செயல்களில் ஈடுபட்டு வருகிறார். 1.நகராட்சி மூலம் அமைக்கப்பட்ட சிறுபாலத்தை சேதம் செய்து தெகை ரூ.30,000 இழப்பு செய்தார் மேற்கண்ட குற்ற செயலுக்காக ஆற்காடு நகர காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. 2. 28வது வார்டுல் எரியாத தெருவிளக்குகளுக்கு அந்த பகுதி மக்களிடம் பிச்சைக்கேட்டு அதை வீடியோ எடுத்து வலைதளங்கள் பதிவிட்டு நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தி வருகிறார்.

3.நகரமன்ற கூட்டத்தின் போது கூட்ட அரங்கில் விதிகளுக்கு புறம்பாக செயல்பட்டு மூன்று மாதந்திர கூட்டத்திற்கு இடை நீக்கம் செய்யப்பட்டார். 4. பூபதி நகர் பகுதியில் நகராட்சியுடைய எந்த ஒரு அனுமதி இல்லாமல் அந்த பகுதி மக்களிடம் பிச்சை எடுப்பதாக வீடியோ எடுத்து பொது குழாய் அமைத்ததையும் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார். 5. பூபதி நகர் குடிநீர் வினியோகம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பாதுக்காக்பட்ட பகுதி அந்த தொட்டிக்குள் அத்துமிறி இறங்கி தண்ணீர் நிரம்புவதை புகைப்படம் மற்றும் Video எடுத்து அதை வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார். மேற்கண்ட, புகார்கள் குறித்து மாவட்ட ஆட்சியர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு எழுத்துபூர்வமாக புகார் அளித்து இதுநாள் வரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளதை உடனடியாக நடவடிக்கை எடுக்க கேட்டு தீர்மானித்தல்.

**தீர்மானம் எண் 257, நாள் 20.10.2023.**

1வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஷே.முனவர் பாஷா அவர்கள் முன்மொழிய 21வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.வி.விஜயகுமார் அவர்கள் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்படுகிறது.

28வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.K.உதயகுமார் அவர்கள் மன்றத்தில் நகரமன்ற விதிகளுக்கு புறம்பாக செயல்பட்டதால் TNDM ACT 1920 13(c) ன்படி மூன்று மாதாந்திர கூட்டத்திற்கு கலந்து கொள்ளாதவாறு நகரமன்றத் தீர்மான எண்.48, நாள் 27.02.2023ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இடைநீக்கம் செய்யப்பட்டார்.

மேலும் உதயகுமார் நகரமன்ற உறுப்பினர் மீது நகரமன்றத் தலைவர் அளித்துள்ள பலபுகார்கள் துறைரீதியாக விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் தொடர்ந்து 28வது வார்டில் K.உதயகுமார் நகரமன்ற உறுப்பினர் எந்தவித அனுமதியும் இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக பொதுக்குழாய் அமைத்தது மற்றும் பூபதி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் பாதுகாக்கப்பட்ட பகுதியில் தன்னிச்சையாக தொட்டிக்குள் இறங்கி தண்ணீர் வந்து விழுவதை வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு உள்ளதை இந்த நகரமன்றம் வண்மையாக கண்டிக்கிறது. இதன் மீது நகரமன்றத் தலைவர் அளித்துள்ள புகாரின் மீது உடனடியாக துறை நடவடிக்கையும் சட்ட நடவடிக்கையும் எடுக்க மன்றத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

மேலும், 28வது வார்டு நகரமன்ற உறுப்பினர் K.உதயகுமார் அவர்கள் தொடர்ந்து, ஆற்காடு நகரமன்றத்திற்கும் நகராட்சிக்கும் அவப்பெயர் ஏற்படும் விதத்தில் நடந்துக்கொண்டது மட்டுமல்லாமல் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுப்பட்டதை கருத்தில் கொண்டும் நகரமன்ற தலைவரின் புகாரின் அடிப்படையிலும் மேற்கண்ட 28வது வார்டு நகரமன்ற உறுப்பினர் K.உதயகுமார் அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க ஏற்கனவே அளிக்கப்பட்ட புகார் விசாரணையில் உள்ளதாலும் 28வது வார்டு நகரமன்ற உறுப்பினர் K.உதயகுமார் அவர்களை மீண்டும் இனி வரும் காலங்களில் நடைபெறவுள்ள இரண்டு மாதாந்திர கூட்டத்தில் கலந்து கொள்ளாதப்படி இடைநீக்கம் (Suspend) செய்து நகரமன்ற தலைவர் அவர்களால் தீர்மானம் கொண்டுவரப்பட்டு தீர்மானம் ஏகமனதாக நிரைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதி 2023(விதி எண்.160(8)(ii) & (iii).

இடம் : ஆற்காடு

நாள் : 20.10.2023

(ஒம்)திருமதி.பெ.தேவி
நகரமன்றத் தலைவர்,
ஆற்காடு நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஆற்காடு நகராட்சி

20/10/2023